## Notice to shareholders – Transfer of Equity Shares of the Company to the Demat Account of Investor Education and Protection Fund (IEPF) Authority

**Published in Trinity Mirror, dt. 01.06.2023 in page no.7**

# SAMBANDAM SPINNING MILLS LIMITED

Post Box No.1, Kamaraj Nagar Colony, Salem 636 014
Ph. 0427-2240790; CIN: L17111TZ1973PLC000675
E mail: corporate@sambandam.com Website: www.sambandam.com

1 st June 2023

**IMPORTANT NOTICE TO SHAREHOLDERS FOR YOUR IMMEDIATE ACTION**

Dear Shareholder(s),

Sub: Transfer of Equity Shares of Unclaimed dividend of the Company to the Demat Account of Investor Education and Protection Fund (IEPF) Authority

Pursuant to the provisions of Section 124(5) of the Companies Act, 2013, the dividend amount remaining unpaid or unclaimed for a period of seven years, are required to be transferred by the Company to the Investor Education and Protection Fund ["IEPF"]. The Company has been regularly uploading on its website and the website of Ministry of Corporate Affairs, full details of such amount of unpaid or unclaimed dividendand in every notice of Annual General Meeting, the Company request its members to encash dividend warrants/claim their dividend before the same is entitled to be transferred to IEPF.

Further, pursuant to the provisions of section 124(6) of the Companies Act, 2013 read with Rule 6 of the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016 with subsequent amendments thereto, shares in respect of unclaimed/unpaid dividend of seven consecutive years required to be transferred to IEPF in the manner prescribed and the transfer of shares to IEPF shall be deemed to be transmission of shares.

In accordance with above provisions, Shares in respect of dividend declared by the Company in the year 2015-16 on completion of seven years will become due to transfer to IEPF within thirty (30) days from 03.09.2023.The Company has uploaded the full details including their folio number or DP ID/Client ID of shareholders lying in unclaimed/unpaid final dividend a/c of the year 2015-16on its website www.sambandam.com

Shareholders may refer the details and please note that all shares in respect of unpaid dividend a/c of the year 2015-16 which remains unclaimed/unpaid for seven consecutive yearswill be transferred to IEPF by the due date referred above. The Shareholders may further note that the details uploaded by the Company on its website should be deemed to be adequate notice for the purpose of transfer of Shares held in demat / physical form to IEPF Authority pursuant to the Rules.

Shareholders who have not claimed their dividend of the year 2015-16can write to Company Secretary, Sambandam Spinning Mills Limited, Post Box No.1, Kamaraj Nagar Colony, Salem 636014.(email: corporate@ sambandam.com and cs@sambandam.com; registered telephone no. 0427-2240790)for further details/clarifications and for making valid claim for the unpaid dividends on or before the referred due date of transfer to IEPF.

In case no valid claim has been made within the above referred period (due date of transfer to IEPF), the Company shall with a view of adhering with the requirements of the Rules, transfer the shares to IEPF by the due date as per the procedure set out in the Rules. No claim shall lie against the Company in respect of unclaimed dividend amount and shares transferred to the IEPF pursuant to the said Rules.

The concerned shareholders holding shares in physical form and whose shares are liable to transferto IEPF, may please note that the Company would be issuing new share certificate(s) in lieu of original share certificate(s) held by them for the purpose of conversion into DEMAT form and subsequent transfer by way of corporate action to DEMAT account of IEPF Authority. Upon such issue of new share certificate(s), the original share certificate(s) which are registered in the name of the shareholder shall stand automatically cancelled and deemed non-negotiable. The shareholders may further note that the details uploaded by the Company in its website should be regarded and deemed adequate notice in respect of issue of new share certificate(s) by the Company for the purpose of transfer of shares to IEPF Authority as prescribed under the said Rules. In case of such shareholders holding shares in dematform, the transfer of shares to DEMAT account of IEPF Authority shall be informed by the Company through the respective depository by way of Corporate action.

Shareholders may note that both the unclaimed dividends and the shares transferred to IEPF including all benefits accruing on such shares, if any, can be claimed back by the concerned shareholder from IEPF Authority after following the procedure prescribed by the Rules.

For Sambandam Spinning Mills Limited
Sd/-
(S.Natarajan)
Company Secretary

Place: Salem
Date: 01.06.2023

PS : In case you have already lodged the documents for claiming your unpaid dividend amount(s), you may kindly ignore this letter

## Notice to shareholders – Transfer of Equity Shares of the Company to the Demat Account of Investor Education and Protection Fund (IEPF) Authority

**Published in Makkal Kural, dt. 01.06.2023 in page no.7**

# சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: தபால் பெட்டி எண். 1,
காமராஜ் நகர் காலனி, சேலம் 636 014
Ph. 0427-2240790; CIN: L17111TZ1973PLC000675
E mail: corporate@sambandam.com Website: www.sambandam.com

**உங்களின் உடனடி நடவடிக்கைக்கான பங்குதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு**

அன்புள்ள பங்குதாரர்களுக்கு,

**பொருள் : கம்பெனியின் சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் (ஐஇபிஎப்) டீமேட் கணக்கிற்கு மாற்றம் செய்தல்.**

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 124 (5) மற்றும் மேற்குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் அடுத்தடுத்து வந்த திருத்தங்களின்படி, தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு கோரப்படாத/ செலுத்தப்படாத டிவிடெண்டு உள்ள பங்குகள் பரிந்துரைக்கப்பட்ட முறையில் ஐஇபிஎப்–பிற்கு மாற்ற வேண்டிய தேவை உள்ளது. கம்பெனி தனது இணையதளத்திலும், கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் இணையதளத்திலும், செலுத்தப்படாத அல்லது உரிமை கோரப்படாத டிவிடெண்டின் முழு விவரங்களையும், வருடாந்திர பொதுக் கூட்டத்தின் ஒவ்வொரு அறிவிப்பிலும் தொடர்ந்து பதிவேற்றி வருகிறது, ஐஇபிஎப்–க்கு மாற்றப்படுவதற்கு முன்பே டிவிடெண்ட் வாரண்ட்களை பணமாகப் பெறுமாறு/தங்கள் டிவிடெண்டை கோருமாறும் கம்பெனி அதன் உறுப்பினர்களை கோருகிறது.

மேலும், கம்பெனிகள் சட்டம், 2013ன் பிரிவு 124(6)ன் விதிகள் மற்றும் அதன் அடுத்தடுத்த திருத்தங்களுடன் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் பணத்தைத் திரும்பப்பெறுதல்) விதிகள், 2016–ன் விதி 6 ஆகியவற்றுக்கு இணங்க, தொடர்ந்து ஏழு ஆண்டுகள் உரிமைகோரப்படாத/செலுத்தப்படாத டிவிடெண்ட் தொடர்பான பங்குகள் பரிந்துரைக்கப்பட்ட முறையில் ஐஇபிஎப்–க்கு மாற்றப்பட வேண்டும் மற்றும் பங்குகளை ஐஇபிஎப்–க்கு மாற்றுவது பங்குகளின் பரிமாற்றமாக கருதப்படும்.

மேற்கண்ட விதிகளின்படி, 2015–16ம் ஆண்டிற்கு கம்பெனியினால் அறிவிக்கப்பட்ட டிவிடெண்ட் 7 ஆண்டுகள் முடிந்ததும் 03.09.2023லிருந்து முப்பது (30) நாட்களுக்குள் ஐஇபிஎப்–பிற்கு மாற்ற வேண்டியது உள்ளது. கம்பெனி 2015–16–ம் ஆண்டுக்கான உரிமை கோரப்படாத/செலுத்தப்படாத இறுதி டிவிடெண்ட் தொகையில் உள்ள பங்குதாரர்களின் போலியோ எண் அல்லது டிபி ஐடி/கிளையன்ட் ஐடி உள்ளிட்ட முழு விவரங்களையும் அதன் இணையதளமான www.sambandam.com–ல் பதிவேற்றியுள்ளது.

பங்குதாரர்கள் அந்த விவரங்களை பார்த்து தெரிந்து கொள்ளலாம் மற்றும் 2015–16–ம் ஆண்டின் செலுத்தப்படாத டிவிடெண்ட் கணக்கைப் பொறுத்தமட்டில், தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக உரிமை கோரப்படாமல்/செலுத்தப்படாமல் இருக்கும் அனைத்துப் பங்குகளும் மேலே குறிப்பிடப்பட்ட தேதிக்குள் ஐஇபிஎப்–க்கு மாற்றப்படும் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ளவும். கம்பெனி அதன் இணையதளத்தில் பதிவேற்றிய விவரங்கள், விதிகளின்படி ஐஇபிஎப் ஆணையத்திற்கு மின்னணு/காகித வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகளை மாற்றும் நோக்கத்திற்காக போதுமான அறிவிப்பாகக் கருதப்பட வேண்டும் என்பதை பங்குதாரர்கள் மேலும் கவனிக்கவும்.

2015–16 ஆண்டிற்கு டிவிடெண்ட் கோராத பங்குதாரர்கள் கம்பெனி செயலாளர், சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், தபால் பெட்டி எண். 1, காமராஜ் நகர் காலனி, சேலம்–636 014 அவர்களுக்கு (மின்னஞ்சல்: corporate@sambandam.com மற்றும் cs@sambandam.com; பதிவு செய்யப்பட்ட தொலைபேசி எண். 0427-2240790) எழுத்துப்பூர்வமாக கோரிக்கை அனுப்பி மேற்கொண்டு விவரங்களை பெறலாம். மேலும் விவரங்கள்/தெளிவுபடுத்தல்கள் மற்றும் ஐஇபிஎப்–பிற்கு மாற்றப்பட உள்ள கெடு தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படாத டிவிடெண்டிற்கு செல்லத்தக்க கோரிக்கை அனுப்பலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் செல்லத்தக்க கோரிக்கை வராதபட்சத்தில், விதிகளை கடைபிடிக்கும் வகையில் கம்பெனியானது விதி நடைமுறைகளின்படி கெடு தேதிக்குள் ஐஇபிஎப்–பிற்கு பங்குகளை மாற்றும். மேற்சொன்ன விதிகளின்படி கோரப்படாத டிவிடெண்ட் மற்றும் ஐஇபிஎப்–பிற்கு பங்குகள் மாற்றப்பட்டது குறித்து எந்தவித கோரிக்கையும் கம்பெனிக்கு எதிராக எழுப்ப முடியாது.

காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் ஐஇபிஎப்–பிற்கு மாற்ற உள்ள பங்குகளை வைத்துள்ளவர்கள், டீமேட் முறைக்கு மாற்றுவதற்காக பங்குதாரர்கள் வைத்துள்ள அசல் பங்கு சான்றிதழ்களுக்கு பதிலாக புதிய பங்கு சான்றிதழ்களை கம்பெனி வழங்கும் என்பதையும், பின்னர் நிறுவன நடவடிக்கையின் மூலம் ஐஇபிஎப் ஆணையத்தின் டீமேட் கணக்கிற்கு மாற்றப்படும் என்பதையும் பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். புதிய பங்கு சான்றிதழ்களை வழங்கிய பின்னர், பங்குதாரர்களின் பதிவு செய்யப்பட்ட அசல் பங்கு சான்றிதழ்கள் தானாகவே ரத்தாகிவிடும் மற்றும் பேச்சுவார்த்தைக்கு உட்படாதது என்று கருதப்படும். மேற்சொன்ன விதிகளில் பரிந்துரைக்கப்பட்டபடி ஐஇபிஎப் ஆணையத்திற்கு பங்குகளை மாற்றுவதற்காக கம்பெனியினால் அளிக்கப்பட்ட புதிய பங்கு சான்றிதழ்களுக்கு போதிய அறிவிப்பாக கம்பெனியினால் இணையதளத்தில் படியேற்றம் செய்யப்பட்ட விவரங்கள் இருக்கும் என கருதப்படுகிறது என்பதை பங்குதாரர்கள் மேலும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருவேளை பங்குதாரர்கள் பங்குகளை டீமேட் வடிவத்தில் வைத்திருந்தால், ஐஇபிஎப் ஆணையத்தின் டீமேட் கணக்கிற்கு பங்குகள் மாற்றப்பட்டதை நிறுவன நடவடிக்கை மூலம் சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி மூலமாக கம்பெனி தெரிவிக்கும்.

கோரப்படாத டிவிடெண்டுகள் மற்றும் பங்குகள் மீது சேர்ந்துள்ள அனைத்து பலன்கள் உள்பட ஐஇபிஎப்–பிற்கு மாற்றப்பட்ட பங்குகளை விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றி ஐஇபிஎப் ஆணையத்திடமிருந்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் அவற்றை திரும்ப கோரி பெறலாம்.

சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
(எஸ். நடராஜன்)
கம்பெனி செயலாளர்

தேதி: ஜூன் 01, 2023
இடம்: சேலம்

பின் குறிப்பு: உங்கள் செலுத்தப்படாத டிவிடெண்ட் தொகையை (கள்) கோருவதற்கான ஆவணங்களை நீங்கள் ஏற்கனவே தாக்கல் செய்திருந்தால், இந்தக் கடிதத்தை தயவுசெய்து புறக்கணிக்கவும்.